**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.63/2024 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சாந்தி | க–பெ | வீரக்குமார் |
| ஊர்: | : | புதுவயல் | சமயம்: | |
| வயது: | : | 36/25 | வட்டம்: | |
| தொழில்: | : | அங்கன்வாடி அரசு ஊழியர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2025**

------------------------------------------------------------------------------------------------

**17.03.2025**

நான் சாக்கோட்டை பிளாக்கில் அங்கன்வாடியில் ஆசிரியராக வேலை செய்கிறேன். ஒவ்வொரு மாதமும் எங்களுக்கு புதுவயலில் மீட்டிங் போடுவார்கள். என் கணவர் என்னை மீட்டிங்கிற்கு அழைத்து செல்வார். என்னுடன் வேலை செய்வதால் புகார்தாரர் எனக்கு நன்கு பழக்கம். அங்கன்வாடியில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரு மொபைல் போன் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் முதல் 7 எண்கள் அனைவருக்கும் ஒன்றாகவே இருக்கும். கடைசி மூன்று எண்கள் மட்டும் வேறுபட்டு இருக்கும். எனது கணவர் False ceiling வேலை செய்து வருகிறார். புகார்தாரரின் வீட்டிற்கு எனது கணவர் வேலைக்கு சென்றபோது அவர்களுள் பழக்கம் ஏற்பட்டு விட்டது. இதுதெரிந்து எனக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. அதன்காரணமாக நான் எனது தாய் வீட்டில் வசித்து வந்தேன். தாட்கோ லோன் எடுப்பதற்காக காசோலையில் கையொப்பம் செய்து வைத்திருந்தேன். அதை தவறாக பயன்படுத்தி புகார்தாரர் இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்.

புகார்தாரரும் எனது கணவரும் தற்போது வரை பழக்கத்தில் இருக்கிறார்கள். என்னை பழிவாங்குவதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. சட்டஅறிவிப்பு தந்த விவரம் எனக்கு தெரியாது. சட்டஅறிவிப்பு எனது கணவரின் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நான் அறிவிப்பு வந்த சமயத்தில் எனது கணவருடன் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக எனது தாயார் வீட்டில் இருந்தேன். நான் தற்போது எனது பிள்ளைகளுடன் தனியாக வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். எனது ஆவணங்களை எடுக்கச் சென்றபோது எனது கணவர் என்னை அவதூறாக பேசி அனுப்பிவிட்டார். காசோலையை எடுத்துக்கொண்டு தவறாக பயன்படுத்தமாட்டார்கள்

என்று நானும் கவனக்குறைவாக இருந்துவிட்டேன். காவல்துறையில் இருந்து எனக்கு தெரிவித்தன் பேரில் தான் என்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியும். எனக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. மேற்படி விவரங்கள் தெரிந்த சங்கர், பாபு, ரகுபதி, பழனிவேல் ஆகியோரை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி